# ஜி.எம். கிளேங் ; ஓரிட மொத்த வியாபார மையம்



கிள்ளான், நவ. 26- மலேசியாவில் மிகப்பெரிய மொத்த வியாபாரத் தலமாக ஜி.எம். கிளேங் (கிள்ளான்) விளங்குகிறது. இதனை மலேசிய சாதனை புத்தகம் அங்கீகரித்துள்ளது. ஒரே இடத்தில் பலதரப்பட்ட பொருட்கள் விற்பனையாகின்றன.

ஆடை ஆபரணங்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள், திருமணத் தேவைக்கான பொருட்கள், தரைவிரிப்பு, விளையாட்டுப் பொருட்கள், உணவு வகைகள் என ஏராள மான தேர்வுகள் பயனீட்டாளர் களுக்கு உள்ளன. ஆயிரத்துக் கும் மேற்பட்ட மொத்த வியா பாரக் கடைகள் இங்கு அமையப் பெற்றுள்ளன.

வணிகர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை நியாயமான விலையில் மொத்த மாக வாங்கிச்செல்லலாம்.

தென் கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய, முதல் முறையான குழந்தைகள் மற்றும் சிறார்களுக்கான விளையாட்டு காட்சி அறையை இது அறிமுகம் செய்துள்ளது. இங்கு 10,000 விதமான மாதிரிகள் கிடைக்கும்.

பயனீட்டாளர்களுக்குத் தேவையான மற்ற அனைத்து சேவைகளும் இங்கு வழங்கப்படு கிறது. 2022 ஆம் ஆண்டுக்கான சில திட்டங்களையும் ஜி.எம். கிளேங் தற்போது தயார் நிலை யில் வைத்துள்ளது.

தொழில் முனைவர்கள், வணிகர்களுக் கான ஜி.எம். கிளேங் செயலி இதில் அடங்கும்.



FB & IG: @gmklang; Twitter: gmklangofficial; Tik Tok: gmklang_official ஆகிய சமூக வலைத்தலத்தில் மேல் விவரங்கள் பெறலாம்.

கோவிட்-19 தொற்றுப் பரவல் கட்டுப்பாடுகள் தளர்த் தப்பட்டிருப்பதை அடுத்து வருகையாளர்கள் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வரு வது குறிப்பிடத்தக்கது.

இத்தொற்றுப் பரவலுக்கு முன்ன தாக சிங்கப்பூர், புருணை உள் ளிட்ட வெளிநாட்டு சுற்றுப் பயணிகள் 100 முதல் 200 பஸ்களில் இங்கு வருவது உண்டு.

வரும் டிசம்பர் மாதம் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு பல்வேறு சிறப்பு சலுகைகளை ஜி.எம். கிளேங் வழங்குகிறது.

# மஇகா மத்திய செயலவைக்கு கே.டி.பாலா போட்டி



கோலாலம்பூர், நவ. 26-

இன்று நடைபெறும் மஇகா மத்திய செயலவைக்கான தேர்த லில் கெமுஜா மஇகா கிளையின் தலைவரான கே.டி.பாலா போட்டி யிடுகிறார். தனது கிளை சார்பாகவும் தொகுதியிலுள்ள மக்களுக்காகவும் இவர் சேவையாற்றியுள்ளார். 1984ஆம் ஆண்டிலிருந்து 1994ஆம் ஆண்டு வரை புக்கிட் பங்சார் மஇகா இளைஞர் பிரிவுத் தலைவராக சேவையாற்றியிருக்கிறார்.

மத்திய செயலவைக்கு போட்டி யிடும் என்னுடைய எண் 5. மஇகா கிளைத் தலைவர்கள், பேராளர்கள் அனைவரும் தனக்கு ஆதரவு தருமாறு கேட்டுக் கொண்டார்.

# கார்டனியா ரொட்டி விலைகள் உயருகின்றன



கோலாலம்பூர், நவ. 26-

ரொட்டி தயாரிப் புக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களின் விலைகள் உயர்வு கண்டிருப்பதால் தனது தயாரிப்பு ரொட்டிகளின் விலைகளை உயர்த்து வதாக கார்டனியா ரொட்டி நிறுவனம் அறிவித்துள்ளது. ரொட்டி தயாரிப்புக்கு தேவையான பால், கோதுமை மாவு, கொக்கோ போன்ற மூலப் பொருட்களின் விலைகளும் போக்கு வரத்து கட்டணமும் அதிகரித்திருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட் டிருக்கிறது. வரும் டிசம்பர் 1ஆம் தேதியிலிருந்து எங்கள் பொருட்களின் புதிய விலைகள் அமலுக்கு வரும் என்று வர்த்தகர்களுக்கு அனுப்பிய அறிக்கை மூலமாக கார்டனியா நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

400 கிராம் கார்டனியா ஒரிஜினல் கிளாஸிக் ரொட்டியின் விலை வெ. 2.50லிருந்து வெ. 2.80 ஆக அதிகரிக்கப்படுகிறது. 600 கிராம் கார்டனியா ஒரிஜினல் கிளாஸிக் ஜும்போ ரொட்டியின் விலை வெ. 3.55 லிருந்து வெ. 4.00 ஆக உயர்த்தப்படுகிறது.

தற்போது வெ. 2.50 ஆக விற்கப்படும் 400 கிராம் கார்டனியா பிராண்ட் & வீட்ஜெர்ம் ரொட்டியின் விலை வெ. 2.90 ஆக உயர்த்தப்படுகிறது. இனி கார்டனியா பிளஃபி பன்ஸ் ரொட்டி வெ. 3.70ஆகவும் கார்டனியா புவாஸ் பன்ஸ் ரொட்டி வெ. 1.30 ஆகவும் விற்கப்படும் என்றும் அது கூறியது.

# 1 எம்.டி.பி. விவகாரம் : யார் இந்த சேமுவல் கோ?

பெட்டாலிங் ஜெயா, நவ. 26-

1எம்.டி.பி. ஊழலில் பேங்க் நெகாரா மலேசியா (பி.என்.எம்.) முன்னாள் கவர்னர் ஸெத்தி அக்தார் அஸிஸ் ஆற்றிய பங்களிப்பு குறித்து அம்னோ உச்சமன்ற உறுப்பினர் புவாட் ஸர்காஷி கேள்வி எழுப்பி யுள்ளார். கட்டிங் ஏட்ஜ் இண்டஸ்ட் ரீஸ் லிமிடெட்டிடம் இருந்து சுமார் 6 கோடியே 50 லட்சம் வெள்ளி 1எம்.டி.பி. பணம் திரும்ப பெறப் பட்டதாக மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் (எம்.ஏ.சி.சி.) சமீபத்தில் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

சிங்கப்பூரிலுள்ள இந்த நிறுவனம் ஸெத்தியின் கணவர் தவ்ஃபிக் அய்மான், அவரின் பங்குதாரர் சேமுவல் கோ ஆகியோரின் கட்டுப் பாட்டில் உள்ளது. கோ, 1எம்.டி.பி. ஊழலுடன் அவருக்கு இருக்கும் தொடர்பு மீதான சில தகவல்களை புவாட் ஒரு முகநூல் பதிவில் நேற்று வெளியிட்டார். நாற்பது லட்சம் அமெரிக்க டாலர் கட்டணத்திற்காக போலி வங்கிக் கணக்குகளை உரு வாக்குவதில் பி.எஸ்.ஐ. முன்னாள் வங்கியாளர் இயோ ஜியா வெய்க்கு தாம் உதவியதைப் பற்றி சிங்கப்பூரில் 2016இல் நடைபெற்ற ஒரு வழக்கில் கோ ஒப்புக் கொண்டதை புவாட் சுட் டிக் காட்டினார்.

ஆபர் இன்வெஸ்ட் மண்ட் பி.ஜே.எஸ். லிமிடெட் (பி.வி.ஐ.) நிறுவனத்திற்காக திறக் கப்பட்ட போலி வங்கிக் கணக்கும் இவற்றில் அடங்கும். 1எம்.டி.பி. யிடம் இருந்து பணம் பெற்ற போலி வங்கிக் கணக்கு இது. உண்மையான வங்கிக் கணக்கு ஆபர் இன்வெஸ்ட் மண்ட் பி.ஜே.எஸ். என்பதாகும் என்று புவாட் கூறினார்.

# சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளி கட்டுமானம் நிறைவடைய கூடுதல் நிதி தேவை



(சுகுணா முனியாண்டி)

சுங்கை பாக்காப், நவ.26-

சுமார் 80 ஆண்டு வரலாற்றைக் கொண்ட சுங்கை பாக்காப் தமிழ்ப் பள்ளிக்கான புதிய கட்டட நிர்மா ணிப்புக்காக அப்பள்ளியின் மேலா ளர் வாரியம் கூடுதல் மானியம் கோரி கல்வி அமைச்சிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

சுங்கை பக்காப், சுருலிங் மாஸ் எனும் இடத்தில் புதிய கட்டடத்திற்கான கட்டு மான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நேற்று பள்ளியின் மேலாளர் வாரியம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் அங்கு வருகை புரிந்தபோது வாரியத் தலைவர் மோகன் சின்னையா நிருபர்களிடம் இதன் கட்டுமான பணிகளின் நிலவரம் குறித்து விவ ரித்தார்.

சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளிக்கு புதிய கட்டடதை நிர்மாணிப்பு கடந்த 10 ஆண்டுகளாக பல்வேறு போராட்டங் களை எதிர்நோக்கி யிருந்தது குறிப்பிடத்தக் கது. இழுபறி நிலைக்குப் பிறகு இப்புதிய கட்டடம் நிறைவு பெறுவது தற் போது சாத்தியமாகி யுள்ளது. எனினும், இதற்கு இன்னும் கூடுத லாக மானியம் தேவைப் படுகிறது. இம்மானியத் திற்கான கோரிக்கை கடிதத்தை கடந்த மார்ச், செப்டம்பர், நவம்பர் ஆகிய மாதங்களில் கல்வி இலாகா விற்கு அனுப்பி யும் இதுவரை யில் எவ்வித பதிலும் இல்லை என மோகன் கூறினார்.



இது முழு அரசாங்கப் பள்ளி யாக அமையப் படவுள்ளது என்பது குறிப்பிடத்தக் கது. சுமார் 4 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டு மாடி கட்டடமாக, அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு பள்ளியாக இது உருவாகும். இதன் கட்டுமான பணிகள் கடந்த ஏப்ரல் 9 ஆம் தேதி தொடங்கின. வரும் 2024 ஏப்ரல் 5 ஆம் தேதி பணிகள் பூர்த்தியடை யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முந்தைய தேசிய முன்னணி ஆட்சியின் கீழ் பல்வேறு தமிழ்ப்பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்கப்பட்டு அவை மேம்படுத் தப்பட்டன. அவற்றில் சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளியும் ஒன்றா கும். கல்வித் துறையின் முன்னாள் துணை அமைச்சர் டத்தோ ப.கமலநாதன் தாமான் சுருலிங் இமாஸ் அருகே இந்த 4 ஏக்கர் நிலத்தை அடையாளம் கண்டு, கடந்த 2015 இல் 35 லட்சம் வெள்ளி மானியத்தையும் வழங் கினார். எனினும், தவிர்க்க முடி யாத சில கார ணத்தால் கட்டுமான பணிகள் தொடங்கப் படாமல் சர்ச்சைகள் நீடித்தன. பினாங்கு மாநில துணை முதல்வர் பேராசிரியர் ப.இராமசாமி உள்ளிட்ட பலரின் முயற்சியால் கட்டு மான பணிகளை மேற்கொள்வ தற்கு வகை செய்யப்பட்டது.



இந்நிலையில் கூடுதல் நிதிக்கு பள்ளி வாரியம் விண்ணப்பம் செய்துள்ளது. தற்போது இங்கு 120 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

# சைட் சாடிக்கின் வழக்கு: உயர்நீதிமன்றத்திற்கு மாற்றம்



கோலாலம்பூர், நவ. 26-

பெர்சத்து தேர்தல் நிதியான 12 லட்சம் வெள்ளி தொடர்பான முன்னாள் அமைச்சர் சைட் சாடிக் சைட் அப்துல் ரஹ்மானின் குற்றவியல் நம்பிக்கை மோசடி (சி.பி.டி.) மற்றும் சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் செவி மடுக்கப்பட வுள்ளன. தம்முடைய வழக்குகளை உயர்நீதிமன்றத் திற்கு மாற்ற சைட் சாடிக் செய்திருந்த மனுவை உயர்நீதி மன்ற நீதிபதி முகமட் ஸைனி மஸ்லான் நேற்று அனுமதித்தார்.

வழக்கறிஞர் கோபிந்த் சிங் டியோ, அரசுத் தரப்பு துணை வழக்கறிஞர் வான் ஷஹாருடின் வான் லாடின் ஆகியோரின் வாதங்களை செவிமடுத்த பின்னர் அவர் இந்த முடிவை தெரிவித்தார்.


**தங்கிய படியே பெண் கவனிப்பாளர் மற்றும் பெண் பராமரிப்பாளர் தேவை!**

- இடம்: ஜொகூர் பாரு
- கூடுதல் சம்பளம்:வெ. 1,800 முதல் வெ. 2,200 வரை
- தீபாவளி போனஸ், பிறந்தநாள் அங்பாவ் வழங்கப்படும்.
- வீட்டு சூழல் போல் உணவு, தங்கு வசதி வழங்கப்படும்.
- வயது: 55 க்குள் இருத்தல் வேண்டும்.

உடனடி தேர்வுக்கு அழைக்க வேண்டிய எண்:
PRINCIPAL 016-3372705

CS00432/26/11/21

**காலேஜ் வேலை வாய்ப்பு**
STUDENTS RECRUITMENT OFFICER
(Getting New Students Intake)
Training will be provided .
Good Career Opportunities
Min. SPM and above Good Communication Skills
( BI, BM,Tamil, Mandarin will be added advantage )
Kindly email to:
hrkolej@gmail.com
உடனடியாக வேலையை தொடங்கலாம்
CONTACT:
011-1634 5490

CS00428/26/11/21

**VACANCY AVAILABLE**
LOOKING FOR FOREIGN WORKERS (MALE)
PART TIME / FULL TIME
JOB RELATED: CANOPY & DECOR
AREA: KL / SELANGOR
CONTACT
H/P:012-985 0900

CS00430/26/11/21


**AKTA INSOLVENSI 1967**
**NOTIS DI BAWAH SEKSYEN 33A**

Notis adalah dengan ini diberikan bahawa, bankrap yang dinamakan dalam jadual di bawah telah dilepaskan daripada kebankrapan melalui Sijil Ketua Pengarah Insolvensi berkuat kuasa pada tarikh seperti yang dinyatakan dalam ruang (5) jadual berikut.

| (1) BIL. | (2) NAMA BANKRAP | (3) NO. K/P | (4) NO. KES | (5) TARIKH KUAT KUASA PELEPASAN |
|---|---|---|---|---|
| 1. | SARASVATHY A/P M NAGAPPAN | 610129-05-5562/6719342 | 29-805-06/2012 | 27.08.2021 |

Bertarikh pada : 18.11.2021

t.t
(NUR ANIDA BINTI MOHD NASIR)
Pengarah Insolvensi Negeri
Cawangan Negeri Sembilan
b.p. Ketua Pengarah Insolvensi Malaysia

AG08851/26/11/21

**AKTA INSOLVENSI 1967**
**NOTIS DI BAWAH SEKSYEN 33A**

Notis adalah dengan ini diberikan bahawa, bankrap yang dinamakan dalam jadual di bawah telah dilepaskan daripada kebankrapan melalui Sijil Ketua Pengarah Insolvensi berkuat kuasa pada tarikh seperti yang dinyatakan dalam ruang (5) jadual berikut

| (1) BIL. | (2) NAMA BANKRAP | (3) NO. K/P | (4) NO. KES | (5) TARIKH KUAT KUASA PELEPASAN |
|---|---|---|---|---|
| 1. | Palanivelo A/L Thangavelu | 610211-05-5385/6974495 | 29-1287-2010 | 29.10.2021 |

Bertarikh pada : 19 .11.2021

t.t
(NUR ANIDA BINTI MOHD NASIR)
Pengarah Insolvensi Negeri
Cawangan Negeri Sembilan
b.p. Ketua Pengarah Insolvensi Malaysia

AG08850/26/11/21


**JAWATAN KOSONG**
KUIL SRI RAJA RAJESWARY
KAMI MERUPAKAN WAKIL KUIL SEPERTI NAMA DIATAS MEMILIKI KEKOSONGAN JAWATAN. KEPADA SESIAPA YANG BERMINAT BOLEH MEMOHON. ANTARA JAWATANNYA ADALAH SEPERTI BERIKUT:
1. GURUKKAL
2. PEMUZIK
SEBARANG MAKLUMAT BOLEH MENGHUBUNGI: PEJABAT
03-4252 8301

CS00424/26/11/21

**வேலை வாய்ப்பு**
உடனடியாக தேவை
1.குருக்கள்
2.நாதஸ்வரம்
3.மேளக் கலைஞர்கள்
PERSATUAN PENGANUT ANANDA MORGA YOGA DAERAH KINTA
தொடர்புக்கு:
010-225 9895
017-576 7062

CS00433/26/11/21

**வேலை வாய்ப்பு**
குருக்கள், நாதஸ்வர மேளக் கலைஞர்கள் உடனடியாகத் தேவை
மலேசிய குடியுரிமை பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
PERSATUAN PENGANUT DEVA PECHAIAMMAN KAMPAR, PERAK, 31900, KAMPAR PERAK
தொடர்புக்கு:
MR.MAHEN
016-343 5944

CS00434/26/11/21

**வேலை வாய்ப்பு**
இடம்:
கோத்தா டாமன்சாரா
1.ஒயர்மேன்
2.லோரி ஓட்டுநர்
3.பொது வேலை
நல்ல சம்பளம்,
ஓ.டி, இ.பி.எப், சொக்சோ
தொடர்புக்கு:
03-6156 4932
019-239 8931

CS00431/26/11/21

**VACANCY MALAYSIA NANBAN**
HQ OFFICE, JALAN IPOH, KL
RECEPTIONIST
(AGE REQUIREMENTS : 18-40 years old)
WORKING TIME: 1.00-9.00P.M
(FEMALE ONLY)
SECURITY GUARD
(AGE REQUIREMENTS : 25-40 years old)
CONTACT :
03-6251 5981
03-6250 1459
hrnanban@gmail.com

FC00100/26/11/21